


## "ஆயுள் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வது" என்பது அவர்களின் நாளைய தினத்தைப் பாதுகாப்பதற்கு நீங்கள் எடுக்கும் புத்திசாலித்தனமான தீர்மானமாகும்.

"உங்கள் அன்பு - பாதுகாப்பு"
இல்லாது தவிப்புடன் துணையின்றி இருக்கும் அவர்களுக்கு ஆயுள் காப்புறுதியின் மூலம்

கிடைக்கும் நன்மைகள் -

- யாருடைய கையையும் எதிர்பார்க்காமல் வாழ்வதற்கான நிதிப் பாதுகாப்பொன்று கிடைத்தல்.
- உங்களுடைய கடன் அல்லது வேறு செலவுகளை தீர்ப்பதற்கு இயலுமாதல்
- பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை தடையின்றித் தொடருவதற்கு இயலுமாதல்.



## ஆயுள் காப்புறுதியொன்றைப் பெற்றுக்கொள்ளும் பொழுது

### அறிந்துகொள்ளுங்கள்...



- ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் மற்றும் தகைமைபெற்ற காப்புறுதி முகவர்கள் பற்றி
- காப்புறுதிக்காக நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய முறை பற்றி
- காப்புறுதி உரிமையை பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள் பற்றி
- காப்புறுதியுடன் கிடைக்கப்பெறும் வரப்பிரசாதங்கள், நன்மைகள் மற்றும் அதில் உள்ளடங்கியுள்ள நிபந்தனைகள் பற்றி

### கவனமாக இருங்கள்...



- காப்புறுதிப் பத்திரத்தை பாதுகாப்பாக வைத்துக்கொள்வதில், உங்களில் தங்கியிருப்போருக்கு அது தொடர்பாக அறியத்தருவதில்
- உங்கள் உடல்நலம் உட்பட அனைத்து விடயங்களையும் மறைக்காமல் கவனமாக காப்புறுதிப் பத்திரத்தில் பூர்த்திசெய்வதில்.
- நீண்ட காலத்திற்கு செலுத்த வேண்டியுள்ளதனால் தமது வருமானத்திற்கு பொருத்தமான தவணைக் கட்டண முறையொன்றைத் தேர்ந்தெடுப்பதில்
- தொடர்ச்சியாக தவணைக் கட்டணத்தைச் செலுத்துவதில்
- தவணைக் கட்டணத்தை காசு மூலம் கொடுப்பனவு செய்வீர்களாயின், அதற்காக காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதில்
- நீங்கள் செய்யும் அனைத்து கொடுப்பனவுகளினதும் பற்றுச்சீட்டுகள் / அறிக்கைகளை கோப்பிலிட்டு வைத்திருப்பதில்

### உங்கள் உரிமை...



- உங்கள் காப்புறுதியின் நிபந்தனைகள் மற்றும் உரிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது
- காப்புறுதி தொடர்பாக காப்புறுதி நிறுவனத்தில் ஏற்படும் எந்தவொரு முறைப்பாடு தொடர்பாகவும் உரிய பெறுபேறைப் பெற்றுக்கொள்வது
- காப்புறுதி நிறுவனம் அல்லது காப்புறுதி முகவர் தொடர்பாக ஏற்படும் முரண்பாடுகளின் போது அது தொடர்பாக தலையிடுவதற்கு இலங்கை காப்புறுதிச் சபைக்கு முறைப்பாட்டை வழங்குவது


**இலங்கை காப்புறுதி சபை**

11 வது மாடி, கிழக்கு கோபுரம் உலக வர்த்தக மையம், கொழும்பு 01.

தொலைபேசி : 011 2396184-9 பக்ஸ் : 011 2396190

மின்னஞ்சல் முகவரி : info@ibsl.gov.lk வெப்தளம் : www.ibsl.gov.lk

IBSL INSURANCE BOARD OF SRI LANKA